செய்தி வெளியீடு எண்:126 நாள் :26.02.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களின் 68–வது பிறந்த நாளை முன்னிட்டு 32 மாவட்டங்களிலும் அரசின் ஐந்தாண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியை 5 இலட்சத்து 44ஆயிரத்து 50 பேர் பார்வையிட்டனர்.**

----

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 68–வது பிறந்த நாளை முன்னிட்டு செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் ஐந்தாண்டு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி அனைத்து மாவட்டங்களிலும் 24.02.2016 மற்றும் 25.02.2016 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியினை சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திறந்து வைத்தார்கள். 5 இலட்சத்து 44 ஆயிரத்து 50 பேர் இப்புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டு, பயனடைந்தார்கள்.

இப்புகைப்படக் கண்காட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாட்டுக்கு உழைத்த தலைவர்களுடன் உள்ள அரிய புகைப்படங்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்ற அரசு விழாக்கள், கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், சிறப்புத் திட்டங்கள், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் போன்ற அரசின் சாதனை விளக்க புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன.

கரூரில் மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் திரு. மு. தம்பிதுரை அவர்களும், நாமக்கல்லில் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. ப. தனபால் அவர்களும், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்களும், தஞ்சாவூரில் மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களும், சென்னையில் மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி எஸ். கோகுல இந்திரா அவர்களும், கடலூரில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்களும், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களும், காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் சானட்டோரியத்தில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா அவர்களும்,

இராமநாதபுரத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்களும், தூத்துக்குடியில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சண்முகநாதன் அவர்களும், விருதுநகரில் செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களும், வேலூரில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி அவர்களும், திருப்பூரில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்களும், ஈரோட்டில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு துறை அமைச்சர் திரு. தோப்பு என்.டி. வெங்கடாசலம் அவர்களும், திருச்சிராப்பள்ளியில் அரசு தலைமைக் கொறடா திரு. ஆர். மனோகரன் அவர்களும், திருவள்ளூர், தருமபுரி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், திண்டுக்கல், அரியலூர், மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தேனி, திருநெல்வேலி, திருவாரூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், பெரம்பலூரில் சார் ஆட்சியரும், விழுப்புரம் மாவட்டம் சின்னச்சேலத்தில் ஒன்றியக் குழுத் தலைவரும் பொதுமக்களின் பார்வைக்காக இக்கண்காட்சியை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொண்ட மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இப்புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**